விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 042 வள்ளுவர் ஆண்டு 2054 தை 16 திங்கட்கிழமை (30.01.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

## 13ஐ அமுல்படுத்துவதில் பெரமுனவுக்குள் குழப்பம்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த காலத்தில் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படாத 13வது திருத்தச் சட்டத்தை தற்போது நடைமுறைப்படுத்த தயாராகினால், அதற்கு முன்னர் அது குறித்து ஆழமாக ஆராய வேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதல் கோட்டாபய ராஜபக்ஷ வரை பதவியில் இருந்த ஜனாதிபதிகள் தாம் பதவி வகித்த காலத்தில் 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடை 11

## கட்டணம் அதிகரிக்கப்பட்டால் தடையின்றி மின்விநியோகம்

### மின்சக்தி அமைச்சு



(கொழும்பு)

புதிய மின் கட்டண திருத்தத்திற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கினால், அன்றைய தினம் முதல் இலங்கை மின்சார சபை தொடர்ந்து மின்சாரத்தை வழங்கும் என மின்சாரம் மற்றும் 11

## மோ.சைக்கிள் விபத்து; ஒருவர் உயிரிழப்பு

### சாவகச்சேரியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானை ஏ9 வீதிப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்ற மோட்டார் 11

### இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம்

## ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் மீளாய்வு!

(ஜெனிவா)

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உலகளாவிய கால மீளாய்வு (UPR) செயற்குழுவால் நான்காவது தடவையாக பெப்ரவரி 1ஆம் திகதி ஆராயப்படும் என மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (03ஆம் பக்கம் பார்க்க)

UNHRC

### சுதந்திர தினத்தன்று

## 3 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் மூவர், எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவைக் கொலை செய்ய முயன்ற 11

## 20 வருடமாக கூட இருந்தவர்களை நல்வழிப்படுத்த தவறிவிட்டோம்

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு



(சாவகச்சேரி)

இருபது வருடமாக கூட இருந்தவர்களை நல்வழிப் படுத்த எடுத்த முயற்சியில் நாம் தோல்வி அடைந்து விட்டோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து 11

## கொள்ளைக் கும்பலைச் சேர்ந்த நால்வர் யாழில் கைது

### வாள்கள், நகை என்பன மீட்பு

(அராலி)

வீடொன்றுக்குள் வாள்களுடன் புகுந்து வீட்டிலுள்ளவர்களை அச்சுறுத்தி நகைகளைக் கொள்ளையடித்து தப்பித்த கும்பலைச் சேர்ந்த நால்வர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கொள்ளையிட்ட நகைகள், வாள்கள் என்பன கைப்பற்றப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கோப்பாய், மூன்று 11

## பகுப்பாய்வு செய்த பின்னே காணிகள் விடுவிக்கப்படும்

### பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை சரியாகப் பகுப்பாய்வு செய்தே அதன் பரிந்துரைகள் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பணிப்பாளர் லெப்டினனன்ட் கேணல் நளின் ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அரசின் கீழ் 3,000 ஏக்கர் நிலம் மட்டுமே உள்ளது. இதில் 11

### வலி.வடக்கில்

## ஒரு பகுதிக் காணி 3ஆம் திகதி விடுவிப்பு

### அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பொதுமக்களின் காணிகளில் ஒரு பகுதிக் காணிகள் எதிர்வரும் 3ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் கையளிப்பதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக ஈழமக்கள் ஜன 11

### நாடு முழுவதும்

## இன்றுமுதல் மழைக்கு வாய்ப்பு

(கொழும்பு)

இன்று முதல் நாடு முழுவதும் மழை பெய்யக்கூடிய சாத்தியங்கள் அதிகமாக காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
23
11
1981

இறப்பு
10
02
2022

அமரர்

## செல்வானந்தன் ரஜீவா



உன் கற்பனைகளுக்கான
நிஜ வாழ்வு தொடங்குகையில்
காலனிடம் உன் வாழ்வு
வீழ்ந்தது ஏன்...?

தீராக்கவலையும்
மாறாச்சோகமும்
தந்து போனாயே...

பிறக்கும்/தோன்றும்
எல்லா உயிர்க்கும்
பொதுவானதெனும்
பொதுபுத்திக்குள்
உன் மரணம்
வர மறுக்க,

உணர்வுகளுக்கு...
ஆழ்ந்த அறிவும்
அறிந்த அறிவும்
ஆறுதலாக்க தெரியவில்லை...

கடைசியில் – யாவும்
காலத்துடன்
தீர்ந்துதான் போகும் எனும்
உண்மையை
எமக்குணர்த்திய
நிதர்சனமானாய்...

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.130 D10,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

உன் பிரிவால்
துயருறும்
குடும்பத்தினர்
077 126 7709

(C-5864)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மனித உரிமைப் பதிவுகள் தொடர்பில் ஜெனிவாவில் ஆராய்வு

(கொழும்பு)

**இலங்கையின் மனித உரிமை பதிவுகள் தொடர்பான விடயங்களை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின், உலகளாவிய காலமுறை மதிப்பாய்வு குழு ஆராயவுள்ளது.**

23 ஆம் திகதி ஆரம்பமான இந்த அமர்வு, பெப்ரவரி 3 வரை இடம் பெறுகின்ற நிலையில் இலங்கை குறித்து நாளை மறுதினம் ஆராயப்படவுள்ளது.

ஏற்கனவே இந்த செயற்குழுவில் இலங்கையின் மனித உரிமை மதிப்பாய்வுகள், முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது முறையின் கீழ் 2008 மே, 2012 ஒக்டோபர் மற்றும் 2017 நவம்பர் ஆகிய வருடங்களில் இடம்பெற்றன.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையினால் பரிந்துரைக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட முன்னேற்ற அறிக்கை, சிறப்பு நடைமுறைகள், மனித உரிமைகள் உடன்படிக்கை அமைப்புகள் மற்றும் பிற ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் என அறியப்படும் சுயாதீன மனித உரிமை நிபுணர்கள் மற்றும் குழுக்களின் அறிக்கைகளில் உள்ள தகவல்கள், தேசிய மனித உரிமைகள் நிறுவனங்கள், பிராந்திய அமைப்புகள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் உட்பட பிற பங்குதாரர்களால் வழங்கப்படும் தகவல்கள் என்பன இந்த கலந்துரையாடலின் போது மதிப்பாய்வு செய்யப்படவுள்ளன.

முதலாம் திகதி ஜெனிவாவில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இலங்கையின் பிரதிநிதிகள் குழுவிற்கு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமை தாங்கவுள்ளார்.

அல்ஜீரியா, பெரிய பிரித்தானியா, வடக்கு அயர்லாந்து மற்றும் கட்டார் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கையின் மீளாய்வுக்கான அறிக்கையாளர்களாக பணியாற்றவுள்ளனர்.

இந்த நிலையில் மதிப்பாய்வுக்கான இறுதி நாளான பெப்ரவரி 3 ஆம் திகதியன்று இலங்கைக்கு அளிக்கப்பட்ட பரிந்துரைகளை, மனித உரிமைகள் பேரவையின், உலகளாவிய காலமுறை மதிப்பாய்வு குழுநிறைவேற்றவுள்ளது. அத்துடன் தமது கருத்துக்களையும்வெளியிடவுள்ளது.(நி)

## வாக்குச் சீட்டு அச்சீடு அடுத்த வாரம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணி அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில் வேட்பு மனுக்களை ஏற்றுக் கொள்ளும் பணி கடந்த 21 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.(நி)

## இணையவழி மூலம் பிரதேச செயலகங்களில் 'பாஸ்போட்' பெற வாய்ப்பு

(கொழும்பு)

பிரதேச செயலகங்களில் இணைய வழியில் . கடவுச் சீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியும் என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

50 பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட 55 நிறுவனங்களில் இணைய வழியில் கடவுச் சீட்டுகளை பெற்றுக்கொள்ளத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இணையவழியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். இணைய வழியில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து, உரிய பிரதேச செயலகங்களில் கைவிரல் அடையாளத்தை வழங்கி, மூன்று நாட்களுக்குள் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்ள முடியும் என குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஜெனரல் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இணையவழியில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து பிரதேச செயலாளர் அலுவலகங்களில் மற்றும் வவுனியா, கண்டி, மாத்தறை, குருநாகல் பிரதேச காரியாலயங்களில் மூன்று நாட்களுக்குள் விரைவு சேவையின் ஊடாக கடவுச் சீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# 45 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கு புதிய வரி

## திட்டமிடும் அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையில் மாதாந்தம் 45,000 ரூபாவுக்கு மேல் வருமானம் ஈட்டும் நபர்களுக்கு புதிய வரியை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை ஐக்கிய தொழில் முனைவோர் சங்கத்தின் தலைவர் சுசந்த லியனாராச்சி ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வர்த்தகர்களுக்கு விதிக்கப்படும் அநியாயமான வரி விதிப்பை இடை நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். எனவே இந்த கோரிக்கைக்கு செவிசாய்க்கா விட்டால் நீதிமன்றத்தை நாடுவேன் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## 7 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் தேர்தல் கடமையில்

(கொழும்பு)


உள்ளூராட்சித் தேர்தலை கண்காணிப்பதற்காக 7,000 சுயாதீன கண்காணிப்பாளர்களை கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.

பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, இதனை தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் முதல் மாவட்ட மட்டத்தில் தேர்தல் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை தேர்தலுக்கு முன்னரான மற்றும் தேர்தலுக்குப் பிந்தைய காலகட்டம் குறித்தும் கண்காணிப்பாளர்கள் அவதானம் செலுத்துவார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# பெப்ரவரி 8 ஆம் திகதி அரசின் கொள்கை அறிக்கை



(கொழும்பு)

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது அமர்வை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்க உள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின் படி அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை முன்வைப்பார்.

ஜனவரி 27 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, கோப் குழு மற்றும் கோபா குழு உள்ளிட்ட 50 இற்கும் மேற்பட்ட குழுக்களின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன.

அத்தகைய குழுக்களுக்கான உறுப்பினர்கள் அடுத்த மாதம் பாராளுமன்றத்தால் மீண்டும் நியமிக்கப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# புலமைப்பரிசில் முடிவுகளின் அடிப்படையில் குழந்தைகளை வகைப்படுத்த வேண்டாம்

## மனநல மருத்துவர் அறிவுறுத்தல்

(கொழும்பு)

புலமைப்பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் குழந்தைகளை வகைப்படுத்தாதீர்கள் என பெற்றோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கராப்பிட்டிய போதனா மருத்துவமனையின் விசேட மனநல மருத்துவர் ரூமி ரூபன் காலியில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெற்றோருக்கும் தேர்வாக இருந்த புலமைப் பரிசில் தேர்வு முடிவுகள் வந்துள்ளன.

புலமைப்பரி சில் பரீட்சை ஒரு முக்கிய மான பரீட்சை. ஆனால் பெறுபேறுகளின் அடிப்படையில் குழந்தைகளை வகைப்படுத்தாதீர்கள்.

புலமைப்பரிசில் பரீட்சை பிள்ளைகளுக்கு குழந்தைப் பருவத்தில் மிகுந்த அழுத்தத்தை ஏற்படுத்தும் பரீட்சை. பக்கத்து வீட்டுக் குழந்தைகளின் முடிவுகள், வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற குழந்தைகளின் முடிவுகள், உறவினர்களின் குழந்தைகளின் முடிவுகளுடன் தமது பிள்ளைகளை ஒப்பிட வேண்டாம்.

இந்த காலத்தினுடைய திறமை எதிர்காலத்தில் இருக்காது. அந்தக் குழந்தைகளால் இன்னும் மேலே செல்ல முடியும்.

எனவே இனி குழந்தைகளை வகைப்படுத்தாதீர்கள் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் வென்றால்தான் தரமான அணியா?

## இந்திய அணிக்கு ஆதரவாக குரல் கொடுத்த பாகிஸ்தான் முன்னாள் வீரர்



இந்திய அணி 10 ஆண்டுகளாக ஐ.சி.சி கிண்ணத் தொடரில் சம்பியனாகவில்லை என்று பேசப்படுகிறது.

ஒவ்வொரு முறையும் ஐ.சி.சி கிண்ணத் தொடரில் ஜெயித்துக் கொண்டே இருக்க முடியாது என பாகிஸ்தான் முன்னாள் வீரர் கம்ரான் அக்மல் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.சி.சி கிண்ணத்தை ஜெயிப்பது மட்டுமே முக்கியம் என்றால், இது வரை ஒரு முறை கூட உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றாத தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு எல்லாம் தடைதான் விதிக்க வேண்டும்.

இந்திய அணி மிகச்சிறந்த கிரிக்கெட் அணி. வித்தியாசமான முறையில் விளையாடி வருகிறது என அக்மல் தெரிவித்தார். (நி)


# சேவை நலன் பாராட்டு



திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்

(நுண்கலைமாணி, கலாவித்தகர்)

எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி இன்று (30.01.2023) ஓய்வுபெறும் ஆசிரியை திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் அவர்கள் தமது ஓய்வுக்காலத்தில் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.



சேவைவிபரம்

- யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி 1989.07.14 - 1990.12.31
- யா/வைத்தீஸ்வராக் கல்லூரி 1991.01.01 - 2010.06.22
- யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 2010.06.23 - 2023.01.30

Congratulations

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்

யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

(14445)



# யா/ஹாட்லிக் கல்லூரி

பருத்தித்துறை

## தரம் 6 அனுமதி - 2023

ஹாட்லிக் கல்லூரியின் தரம் 6 (2023) வகுப்புகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் நிகழ்நிலையில் மட்டும் கோரப்பட்டுள்ளன.

"Google Form" வடிவிலான நிகழ்நிலை விண்ணப்பத்திற்குரிய இணைப்பினை கல்லூரியின் இணையத்தளமான *www.hartley.lk* இலிருந்து தரவிறக்கம் செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி : 2023.02.24

- அதிபர்

(C-5865)


# மரண அறிவித்தல்

## திருமதி சறோஜினிதேவி புஷ்பநாதன்

(பங்குதாரர் துர்க்கா பொத்தகச் சோலை - சுன்னாகம்)



தோற்றம் 24.05.1951 — மறைவு 29.01.2023

தேவிவாசா, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி புஷ்பநாதன் அவர்கள் நேற்று (29.01.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - அன்னபூரணம் தம்பதிகளின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற சபாபதி - பூமணி தம்பதியரின் பிரியமான மருமகளும் சபா. புஷ்பநாதனின் (துர்க்கா பொத்தகச் சோலை, சுன்னாகம்) பாசமிகு துணைவியும், ஜனனி (மனிதவள முகாமையாளர் - திண்ணை), வைத்திய கலாநிதி ஷாலினி (தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்பான அன்னையும் காலஞ்சென்ற யோகராசா மற்றும் ஜெயராசா, விஜயராசா, சௌந்தரராசா (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) மகேந்திரராசா மற்றும் கிருபாகரன் (WM பாதுகாப்புச் சேவை) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பஸ் நிலையம் முன்பாக சுன்னாகம்.

தகவல் குடும்பத்தினர்

(C-5866)

# உலகக்கிண்ண ஹொக்கி

## 9ஆவது இடம் பிடித்தது இந்தியா

9 முதல் 12 வது இடத்துக்கான ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் இந்தியா 5-2 என்ற கோல் கணக்கில் தென்னாபிரிக்காவை தோற்கடித்தது.

16 அணிகள் பங்கேற்றுள்ள 15 ஆவது உலக கிண்ண ஹொக்கி, ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா அரங்கில் கடந்த 13ஆம் திகதி ஆரம்பமானது.

ரூர்கேலாவில் நேற்று முன்தினம் நடந்த 9 முதல் 12 ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் இந்தியா 5-2 என்ற கோல் கணக்கில் தென்னாபிரிக்காவை தோற்கடித்தது. இந்திய அணியில் அபிஷேக் 5ஆவது நிமிடத்திலும் கப்டன் ஹர்மன் பிரீத் சிங் 12 ஆவது நிமிடத்திலும் ஷாம் ஷெர் சிங் 45ஆவது நிமிடத்திலும் [illegible] [illegible]ஆவது நிமிடத்திலும் சுக் ஜீத் சிங் 59ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர்.

தென்னாபிரிக்கா தரப்பில் மிம்வி சாம்கிலோ 49 வது நிமிடத்திலும் முஸ்தபா காசிம் 60 வது நிமிடத்திலும் கோல் திருப்பினர். இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி ஆர்ஜென்டீனாவுடன் இணைந்து 9வது இடத்தைப்பெற்றது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 220 | 250 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 350 |
| தக்காளி | 220 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 200 | 200 | 300 |
| பூசணி | 100 | 100 | 100 |
| புடோல் | 150 | 180 | 120 |
| வாழைக்காய் | 200 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 500 | 500-800 | 600 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 200 |
| பாகற்காய் | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 320 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 400 | 400 | 400 |
| லீக்ஸ் | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 180 | 240 | 250 |
| கறிமிளகாய் | 700 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 1400 | 1200 | 1500 |
| போஞ்சி | 300 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | — | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 |
| தேசிக்காய் | 60 | 50 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 40-80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 350 | 250 |
| வெங்காயப்பூ | 150 | 300 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 120 | 100 | 80 |
| வல்லாரை | 140 | 50 | 50 |
| ஈரப்பலா | 160 | 150 | 180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 நாட்களில் 55 பேருக்கு தூக்குத் தண்டனை

# உலகை உலுக்கும் ஈரானின் மரண தண்டனைகள்

(டெஹ்ரான்)

**இந்த ஆண்டு தொடங்கி கடந்த 26 ஆம் திகதிக்குள் மட்டும் 55 பேர் ஈரானில் தூக்கிலிடப்பட்டுள்ளதாக நோர்வேயை தளமாகக் கொண்ட ஈரான் மனித உரிமைகள் அமைப்பு அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளது.**



ஹிஜாப் போராட்டக்காரர்களுக்கு எதிரான ஈரான் அரசின் மரண தண்டனைகள் உலகையே உலுக்கி வருகின்றன.

இந்நிலையில், போராட்டங்களில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மூன்று இளைஞர்கள் 18 வயதே நிரம்பியவர்கள் என்றும் காவலில் "கொடூரமான சித்திர வதைக்கு" உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டங்கள் தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் 4 பேரும் அதே நேரத்தில் பெரும்பாலான குற்றவாளிகள் போதைப் பொருள் விவகாரம் தொடர்பாகவும் தூக்கிலிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 107 பேர் மரண தண்டனை விதிக்கப்படும் அபாயத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவனை மீது உக்ரைன் தாக்குதல்

### 14 பேர் உயிரிழப்பு, 24 பேர் காயம்



(மொஸ்கோ)

கிழக்கு உக்ரைனில் ரஷ்யாவின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் உள்ள மருத்துவ மனை மீது உக்ரைன் இராணுவம் தாக்குதல் நடத்தியதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது.

குறித்த தாக்குதலில் 14 பேர் கொல்லப்பட்டதோடு 24 நோயாளிகள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் காயமடைந்தனர் என்றும் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நடந்த இந்த தாக்குதல் குறித்த ரஷ்யாவின் குற்றச்சாட்டுகளுக்கு உக்ரைனில் இருந்து எந்த பதிலும் இதுவரை வெளியாகவில்லை.

இதேநேரம் இந்தத் தாக்குதல், அமெரிக்கா வழங்கிய ஹிமார்ஸ் ரொக்கெட் ஏவுதளத்தைப் பயன்படுத்தி நடத்தப்பட்டது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் குறித்த தாக்குதல் உக்ரைன் அரசாங்கத்தின் கடுமையான போர்க் குற்றம் என்றும் இதற்கு அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும் என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது. (நி)

## 6 இலட்சம் அமெரிக்க டொலருக்கு ஏலம் போன டயானாவின் ஆடை



(லண்டன்)

பிரித்தானிய இளவரசி டயானாவின் உடை நியூயோர்க்கில் 6 இலட்சம் அமெரிக்க டொலருக்கு ஏலம் போனது.

இளவரசி டயானாவின் மிகவும் பிரபலமான ஊதா நிற வெல்வெட் ஆடை கடந்த வெள்ளியன்று நடந்த ஏலத்தில் விற்கப்பட்டது.

இந்த ஆடையானது முன் மதிப்பீட்டை விட 5 மடங்கு அதிகமான விலையைப் பெற்றது.

இதன்மூலம் இது பிரித்தானிய அரச குடும்பத்தின் விலையுயர்ந்த ஆடையாக மாறியது.

மறைந்த வேல்ஸ் இளவரசியான டயானா 1991 இல் அதிகாரபூர்வ அரச உருவப்படத்திலும் 1997 இல் ஒரு வேனிட்டி ஃபேர் போட்டோஷூட்டின் போதும் இந்த ஆடையை அணிந்திருந்தார். (நி)

## இராசிபலன்

30.01.2023
தை 16, திங்கட்கிழமை
நவமி பிற்பகல் 3.07 மணிவரை

கார்த்திகை பின்னிரவு 2.27 மணிவரை
சுபநேரம் 12.36-2.06 மணிவரை
இராகுகாலம் 08.06-9.36 மணிவரை

சந்திராஷ்டமம்
சித்திரை, சுவாதி

வளவன்




யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.




சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.




ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து சேரலாம், எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள்.




கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலில் மேன்மையுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள்.




எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண வேண்டிய நாள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.




சுப தகவல்கள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.




எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள்.




பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போட்டிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கடன் சுமை குறைய நடவடிக்கை எடுப்பீர்கள், உடல் நலன் சீராகும்.




முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**செய்வதற்கு எப்போதும் வேலையிருக்க வேண்டும், அப்போதுதான் முன்னேற முடியும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கக் கோரி கையெழுத்து போராட்டம்



(அராலி)

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வசந்த முதலிகேயை அனைத்து வழக்குகளிலிருந்தும் முற்றாக விடுதலை செய்யக்கோரியும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்று முழுதாக நீக்கக் கோரியும் பல்கலைக் கழக மாணவர்களால் நேற்று கையெழுத்துப் போராட்டம் யாழில் முன்னெடுக்கப்பட்டது. (நி-104)

## நீருக்கான கட்டணத்தை செலுத்தி நீர்த்துண்டிப்பை தவிருங்கள்

### தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

(யாழ்ப்பாணம்)

நீர் கட்டணத்தைச் செலுத்தி நீர் துண்டிப்பைத் தவிர்க்குமாறு வாடிக்கையாளர்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் யாழ். பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குழாய் வழி நீர் இணைப்பை பெற்றுள்ள பொது மக்கள், தங்களின் மாதாந்த நீர்க் கட்டணப் பட்டியலை ஒரு மாதத்திற்கு மேல் செலுத்தாது இருப்பின் அவர்கள் உடனடியாக கட்டணத்தை செலுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தவறும் வாடிக்கையாளர்களின் நீர் இணைப்பை துண்டிப்பதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

எனவே, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த வாடிக்கையாளர்கள் உடனடி யாக தங்களது மாதாந்த நீர்க் கட்டணத்தை செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (நி)

## தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் அச்சுறுத்தலுக்கு பயந்து பதவி விலகக்கூடாது

### சுமந்திரன் எம்.பி வலியுறுத்து

(சாவகச்சேரி)

அச்சுறுத்தல்களுக்குப் பயந்து பதவி விலகுபவர்களாக தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் இருக்கக்கூடாது எனப் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரி தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இதனைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

ஜனநாயக நாடு என்று கூறிக் கொண்டு அந்த நாட்டில் சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்த விடாமல் தடுக்கின்ற எதேச்சதிகார வன்முறைப் போக்கினை கடுமையாக கண்டிக்கிறோம்.

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள் எவரும் இதற்குப் பயந்துவிடக்கூடாது. நீங்கள் சுயாதீனமானவர்கள் என்ற நம்பிக்கையோடு நியமிக்கப்பட்டுள்ளீர்கள். அச்சுறுத்தல்களுக்குப் பயந்து பதவி விலகுபவர்களாக நீங்கள் இருக்கக்கூடாது.

இப்படியான அச்சுறுத்தல்களைச் செய்பவர்களை கண்டுபிடித்து உடனடியாக சட்டத்தின் முன்னிறுத்த வேண்டும். நாட்டு மக்கள் அனைவரும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவிற்கு பின்பாக நின்று அவர்களுக்கு சக்தியைக் கொடுத்து இந்த தேர்தலை சுயாதீனமான தேர்தலாக நடத்த உதவி செய்ய வேண்டும் என நாட்டு மக்களைக் கோருகின்றோம்.

இலங்கையின் பெயரிலேயே ஜனநாயக சோஷலிசக் குடியரசு என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் இங்கே ஜனநாயகமும் இல்லை. சோசலிஷமும் இல்லை. வழக்கமாக ஏதாவது ஒன்று இல்லை என்றால் தான் இருப்பதாக காட்டிக் கொள்ளும் பெயரிலே அதனைச் சேர்த்துக்கொள்வார்கள் என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். (நி-30)

## இடையூறு ஏற்படுத்துபவர்கள் தொடர்பில் தாமதிக்காது தகவல் வழங்குங்கள்

### மகிந்த குணரட்ன

(அராலி)

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பவர்கள் மற்றும் வன்முறையாளர்கள் தொடர்பில் தகவல் வழங்கினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகிந்த குணரட்ண அறிவித்துள்ளார்.

மீற்றர் வட்டிக்கு பணம் வாங்கியவர்களிடம் பணத்தை மீள வசூலிப்பதற்காக அடித்துத் துன்புறுத்திய கும்பல் தொடர்பில் வெளியாகிய காணொளிகள் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டமையை சுட்டிக்காட்டிய அவர் மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். (நி-104)

# 75 ஆவது அகவையில் பவள விழாக் காணும் எங்கள் பேராசிரியர் மா.சின்னத்தம்பி

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்களுக்கு இன்று அகவை எழுபத்தைந்து ஆகும். இலங்கை கல்வி வரலாற்றில் தனக்கென தனி இடம்பிடித்து தடம்பதித்து இன்றும் துடிப்பு மிகுந்த இளைஞனாக அறிவைப் பரிமாற்றம் செய்யும் மாபெரும் கல்விச் சொத்து. எல்லோரும் கூறுவது போல வறுமை கல்விக்கு தடை என்பதை உடைத்தெறிந்து பல்வேறு சோதனைகளையும் வேதனையையும் எதிர்கொண்டு அவற்றை சாதனையாக்கியவர் எங்கள் பேராசான். கல்வியியல் சார்ந்தோர்களுக்கு ஓர் உதாரண புருசனாக மட்டுமன்றி தமிழுலகின் கல்வி வளர்ச்சியில் அவர் தம் பங்கு அளப் பரியதாகும்.

கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். கடமைக்காக செய்வது வீண் முயற்சி என்ற தத்துவத்தினை பொருட்படுத்தும் வகையில் கல்வியில் கடமையைச் சரியாகச் செய்கின்ற துடிப்புள்ள வழிகாட்டி என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அணுகுவதற்கும், பழகுவதற்கும் இவரைப்போல நல்ல மனிதர் வாய்த்திட மாட்டார் எனப் பலரும் போற்றும் உத்தம பண்பாளர். இந்திய தேசம் 1948 ஆம் ஆண்டு தை மாதம் 30 ஆம் திகதி மகாத்மா காந்தி என்ற அற்புத மனிதரை இழந்து துயருற்ற நாளில், அண்டை நாடான இலங்கையிலே மீண்டும் ஒரு கல்வியின் காந்தியாக அவதரித்தவர் எங்கள் பேராசான் மா.சின்னத்தம்பி. தனித்துவமான பன்முக ஆளுமைத் திறன்களைக் கொண்டவராக, சமூக மாற்றத்தினை நேசித்ததுடன் மட்டுமன்றி மாற்றத்தின் முகவராகவும் தன்னை அர்ப்பணித்தவர் எங்கள் பேராசான். கற்பிப்பதில் அபரிமிதமான ஆர்வம் கொண்டவராக மட்டுமன்றி கற்பிக்கும் ஆசிரியன் எப்படி இருக்க வேண்டும். எப்படி தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற பல்வேறு பரிமாணங்களை ஒவ்வொரு அசைவிலும் வெளிப்படுத்தும் மனிதப் பல்கலைக்கழகமாகத் திகழ்பவர்.

ஆரம்பக் கல்வியினை யா/பாரதி பாஷிய வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வி, உயர்கல்வியினை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பயின்றதுடன் தனது உயர் பட்டப் படிப்பினை இலங்கை பல்கலைக்கழகத்தில் (கொழும்பு) தொடர்ந்து பொருளியல் சிறப்புப் பட்டத்தினையும் (B.A Hons in Economics) பெற்றதுடன் பொருளியல் தத்துவமாணி (B.Phil in Economics) பட்டத்தினையும் பெற்றிருந்தார்.

அதன் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலையிலேயே பட்டப்பின் கல்வி டிப்ளோமா (Dip.in Education), பொருளியல் முதுமாணி (M.A in Education), கல்வியியல் முதுதத்துவமாணி (M.Phil in Education) எனப் பல பட்டங்களைப் பெற்றிருந்தார். இதேவேளை 1986 - 1989 வரை சமூகக்கல்விப் பாடத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக வலயம் ஒன்றிலே கடமையாற்றி 1989 - 1990 களில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் க.பொ.த. உயர்தரத்தின் தேசிய பரீட்சைகள் பொருளியல் பாடத்தின் மேலதிக பிரதம பரீட்சகராகப் பணிபுரிந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக பணிபுரிந்த இவர் 1990 தொடக்கம் 1996 வரை கல்வியியற்றுறை விரிவுரையாளராகவும் 1997 இல் இருந்து சிரேஷ்ட விரிவுரையாளராகவும் கடமை புரிந்து 2003 தொடக்கம் 2008 வரை கல்வியியற்றுறை தலைவராகவும் 2005 முதல் கல்வி முதுமாணி கற்கைநெறி இணைப்பாளராகவும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி இணைப்பாளராகவும் பணிபுரிந்தார்.

2010 ஆம் ஆண்டில் பேராசிரியராகப் பதவியுயர்வு பெற்று தனது சேவையிலே ஓய்வு நிலை பெற்றிருந்தாலும் இன்று வரையும் ஆசிரியர்களுக்கான கல்வியினை



வழங்குவதில் துடிப்புள்ள இளைஞனாக கற்றறிந்தோர் நயந்தேற்றும் விதத்தில் அற்புதமாய் கற்பித்தற் பணியினை ஆற்றி வருகின்றார்.

இவரது தொழில் வாழ்க்கையில் பல சவால்களுக்கு முகங்கொடுத்து முயற்சி என்பது மட்டுமே வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான முதலீடு என்பதை நிலைநாட்டி வெற்றி பெற்றுயர்ந்த வழிகாட்டியாகவே வியந்து பார்க்கப்படுகின்றார். பாட ஆயத்தம் இன்றி கற்பித்தலில் வெற்றி பெற்றிட முடியாது என்பதை உணர்த்தும் வகையில் நடை, உடை, பாவனை, செயல் என்ற அனைத்தும் நல்ல ஆசிரியருக்குரிய நடத்தைப் பாங்கினை இன்று வரை பின்பற்றுபவர். கற்பித்தல் மீது தீராத ஆர்வமும் காதலும் கொண்ட காரணத்தினால் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டதாரித் திணைக்களத்தில் 1973 தொடக்கம் 1984 வரை பொருளியல் விரிவுரையாளராக பணியாற்றினார். இதன் பின்னர் 1974 தொடக்கம் 1989 வரை வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி என்பவற்றில் பொருளியல் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

மும்மொழி ஆற்றலில் சிறந்து விளங்கி இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உறுதுணையாக இருந்து வருகின்றார். இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் வருகைதரு விரிவுரையாளராகவும் பணிபுரிந்ததுடன், அவரது கலை இலக்கிய கல்வி வெளியீடுகள் உலகளவில் போற்றப்படுகின்றன. பேராசிரியர் சோ.சந்திரசேகரத்துடன் இணைந்து எழுதிய கல்வியும் மனிதவளவிருத்தியும் கல்வித்திட்டமிடல் கோட்பாடுகளும் புதிய வளர்ச்சியும் போன்ற படைப்பாற்றல்கள் பிரமிக்கத்தக்க படைப்புக்களாகும்.

இன்று கல்வி நிர்வாக சேவையில் இருக்கும் நிர்வாகிகளில் 90 வீதமானோர் இவரது கல்விப் பட்டறையில் பட்டை தீட்டப்பட்டவர்களாவர். நீ என்ன மாற்றத்தை காண வேண்டும் என்று விரும்புகின்றாயோ அதை முதலில் உன்னில் உருவாக்கிக் கொள் என்ற தத்துவத்திற்குச் சொந்தக்காரர். சிறந்த சிந்தனையும் உயர்ந்த எண்ணமும் இருந்துவிட்டால் உன்னை வெல்ல யாருமில்லை என்ற இவரது வார்த்தைகள் என்றும் மறக்க முடியாதவையாகும். வெளிநாட்டில் வசிப்பதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தபோதும் மண் மீது கொண்ட பற்றினால் அதனை தவிர்த்து எம் மண்ணிற்காக ஆற்றும் சேவைக்கு தலைவணங்கி பவள விழாக் காணும் பேராற்றல் பேராசான் நீண்டகாலம் நோய் நொடி இன்றி வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ப.சசிகுமார்
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் கல்வி வலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணையற்ற ஒருவரால் 13 ஐ முழுமையாக அமுல்படுத்த முடியாது

## பாராளுமன்ற உறுப்பினர் சன்ன தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்டு 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளாரே தவிர, தமிழ் மக்கள் மீது கொண்ட இரக்கத்தினால் அல்ல என பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

உண்பதற்கு உணவின்றி மக்கள் தவித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான கருத்துக்களை தெரிவித்து நாட்டில் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

13ஆவது திருத்தம் அரசியலமைப்பின் ஒரு பகுதி என்பதால் அதனை நடைமுறைப்படுத்துவது தனது கடமையாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஏமாற்றுவதற்காகவே அவர் இவ்வாறு செயற்படுகின்றார்.

முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் மைத்திரிபால சிறிசேன ஆகியோரை அருகில் வைத்துக் கொண்டே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் கூறுகின்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் தனக்கு தண்டனை கிடைத்து விடும் என்ற அச்சத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி கூறும் அனைத்திற்கும் தலையசைத்துக் கொண்டிருக்கின்றார்.

மகிந்த ராஜபக்ஷ புத்தி சுயாதீனத்துடன் இருந்தால் இதற்கு இணக்கம் தெரிவித்திருக்கமாட்டார். வயோதிபமடைந்துள்ள அவர் பயங்கரவாதத்தை தோற்கடித்து பெற்றுக் கொண்ட கௌரவத்தைக் கூட இழக்கும் வகையிலேயே செயற்பட்டுக்.கொண்டிருக்கின்றார்.

மக்கள் ஆணையற்ற பெயரளவிலான ஜனாதிபதிக்கு இவ்வாறான பாரதூரமான முடிவுகளை எடுக்கக் கூடிய உரிமை இல்லை. தேர்தல் மூலம் வெற்றி பெற்று ஜனாதிபதியானால் அவரால் இதனை செய்ய முடியும். மாறாக தற்போது அவரால் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியாது என அவர் தெரிவித்தார். (நி)

# கறுப்பு தின நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து சுவரொட்டிகள்




(மட்டக்களப்பு)

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தினத்தினை கறுப்பு தினமாக அனுஷ்டிப்பதற்கும் சுதந்திர தினத்திற்கு எதிராக பேரணி ஒன்றினை முன்னெடுப்பதற்கும் பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் அமைப்புக்கள் இணைந்து அழைப்பு விடுத்துள்ளனர்.

அந்த வகையில் குறித்த விடயத்தினை பிரதிபலிக்கும் விதத்திலும் கறுப்பு தின நிகழ்வுக்கும் கண்டனப் பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவில் அமைப்புக்களால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (நி)

# வளி மாசடைதல் மீண்டும் அதிகரிப்பு

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல நகரங்களில் வளி மாசடைதல் அதிகரித்துள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் சரத் பிரேமசிறி தெரிவிக்கையில், பல நகரங்களில் காற்றின் தரம் 100 முதல் 150 வரை உள்ளது.

இதேவேளை அடுத்த சில தினங்களிலும் இந்நிலை தொடரலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே முகக்கவசத்தை அணிவதன் மூலம் நச்சு வாயு பாதிப்பை தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# ஜனக்க ரத்னாயக்கவை பதவி நீக்க தீர்மானம்

(கொழும்பு)

பொதுப்பயன்பாடு ஆணைக்குழுவின் தலைவர் பதவியிலிருந்து ஜனக்க ரத்னாயக்கவை நீக்குவதற்கு அரசாங்கத்தின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒப்புதல் வழங்கியுள்ளனர் என மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அத்துடன், பொதுப் பயன்பாடு ஆணைக்குழுவின் தலைவருக்கு எதிராக குற்றப் பத்திரம் ஒன்றும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்தக் குற்றப்பத்திரம் எதிர்வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றில் முன்வைக்கப்படும் எனவும் தன்னிச்சையான தீர்மானங்களை அவர் எடுத்து வருகின்றார் என்றும் வலுசக்தி அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார். (நி)

# மானிய உரத்தில் புழுக்கள் அதிர்ச்சியில் விவசாயிகள்

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு விவசாய அமைச்சர் பணிப்பு



(கொழும்பு)

விவசாயிகளுக்கு வழங்கப்படும் யூரியா மானிய உரத்தில் புழுக்கள் காணப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசாங்கத்தின் உரமானியத்தின் கீழ் பெறப்பட்ட யூரியா உரத்தில் புழுக்கள் இருப்பதாக மகாவலி பிராந்தியத்தின் திம்புலாகல மனம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் பலர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மரண அறிவித்தல்

## அமரர்.சாமுவேல் ஜெயரட்ணம்



தோற்றம் 25.05.1948

மறைவு 21.01.2023

யாழ்.கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் லண்டன் Barkingside ஐ வதிவிடமாகவும் கொண்ட சாமுவேல் ஜெயரட்ணம் அவர்கள் 21.01.2023 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், சாமுவேல் அரியதாசன் மேரி யோசப் தம்பதியரின் அன்பு மகனும், இராசையா புஸ்பம் தம்பதியரின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும்,வினோத் சாமுவேல் அவர்களின் ஆருயிர்த் தந்தையும்,யூடி அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஜெயரட்ணம், ஜோர்ஜ், தர்மரட்ணம், டெய்சி (தேவி), மேரி(ராணி), காலஞ்சென்ற விக்டர் சுகரட்ணம் , மாகிறட் (ரதி), எட்வேட் விஜயரட்ணம் (விஜயன்), எலிசபேத் (பபி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யெபசெல்வி (Australia), நிலானி (Australia), உமாமகேஸ்வரி (Doctor Canada), திருஞானரட்ணம்(Retired Fisheries Inspector ),காலஞ்சென்ற தவராஜா, மனோரஞ்சலிங்கம் (London), காலஞ்சென்ற ரட்னரூபன், கமலாம்பிகை (ஓய்வு பெற்றவர் -வலிகாம கல்வி வலயம்), இராஜேஸ்வரி (பத்மா), இராஜதுரை (சந்திரன்),ரட்ணேஸ்வரி(கலா) ,காலஞ்சென்ற அண்ணாதுரை (ரவி), வசந்தேஸ்வரி(ரதி),நிர்மலாதுரை(ரகு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30.01.2023 திங்கட்கிழமை பி.ப 03.00 மணியளவில் city of london cemetery & crematorium Aldersbrook RD,London E125DQ, UK எனும் இடத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனை இன்று 30.01.2023 திங்கட்கிழமை London இல் நடைபெறும் வேளையில் அன்னாரின் பிறப்பிடமாகிய கந்தரோடை சுன்னாகத்திலும் 2 மணியளவில் ஆராதனை நடைபெறும் என்பதனை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(14444)

'Gracylin'
கந்தரோடை, சுன்னாகம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 89





"சோழனுடைய பொன் பழுவேட்டரையனுடைய முத்திரை. நான் சொன்னது சொன்னபடி நிறைவேற்றிவிட்டேன். உங்களுடைய செய்தி என்ன? நமது இடும்பன்காரி ஏதாவது செய்தி கொண்டு வந்திருக்க வேண்டுமே?" என்றான் ரவிதாஸன்.

"ஆம் கொண்டு வந்திருக்கிறார் கேளுங்கள்!, அவரே சொல்லுவார்!"

இடும்பன்காரி சொல்லத் தொடங்கினான் "தங்கள் கட்டளைப்படியே சம்புவரையர் மாளிகையில் பணியாளாக நான் அமர்ந்து வேலை பார்த்து வருகிறேன். அதனுடைய பலன் நேற்றிரவுதான் சித்தித்தது. நேற்று சம்புவரையர் மாளிகையில் ஒரு பெரிய விருந்து நடந்தது:

பெரிய பழுவேட்டரையர், வணங்கா முடி முனையரையர், மழபாடி மழுவரையர் முதலிய பலர் வந்திருந்தார்கள். குரவைக் கூத்தும் வேலனாட்டமும் நடைபெற்றன.

வேலனாட்டம் ஆடிய தேவராளனுக்குச் சந்நதம் வந்து குறி சொன்னான். அவன் சொன்னது நம்முடைய நோக்கத்துக்கு அனுசரணையாகவே இருந்தது. பழுவேட்டரையருடன் வந்த மூடு பல்லக்கில் அவருடைய இளையராணி வந்திருப்பதாக எல்லோரும் எண்ணியிருந்தார்கள்.

சுந்தர சோழ மகாராஜாவுக்கு உடல் நலம் சரியாயில்லையென்றும் அதிக நாள் உயிரோடிருக்க மாட்டாரென்றும் பழுவேட்டரையர் தெரிவித்தார். எல்லோருமாகச் சேர்ந்து அடுத்தபடி பட்டத்துக்கு வரவேண்டியவர் ஆதித்த கரிகாலர் அல்ல. மதுராந்தகத் தேவர் என்று முடிவு செய்தார்கள். ஆனால் மதுராந்தகத்தேவர் இதற்குச் சம்மதிப்பாரா என்று சிலர் கேட்டார்கள்.

'அவர் வாயினாலேயே அதற்கு மறுமொழி கூறச் செய்கிறேன்' என்று சொல்லிப் பழுவேட்டரையர் மூடு பல்லக்கின் திரையைத் திறந்தார். அதற்குள்ளிருந்து மதுராந்தகத் தேவர் வெளி வந்தார். பட்டம் கட்டிக் கொள்ளத் தமக்குச் சம்மதம் என்று அவர் தெரிவித்தார்"

"இப்படி பெண் வேஷம் போடும் பராக்கிரமசாலிக்கு முடி சூட்டப் போகிறார்களாம்! நன்றாய்ச் சூட்டட்டும் எல்லாம் நாம் எதிர்பார்த்தபடியேதான் நடந்து வருகிறது. இம்மாதிரி சோழ நாட்டிலேயே ஒரு குழப்பம் ஏற்படுவது நம்முடைய நோக்கத்துக்கு மிக உகந்தது. எது நேர்ந்தாலும் என்ன நடந்தாலும் நம்மை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள் அல்லவா?

இடும்பன்காரி! மிக முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறீர். ஆனால் இதெல்லாம் எப்படித் தெரிந்து கொண்டீர்? இதற்குச் சந்தர்ப்பம் எப்படி வாய்த்தது?" என்று கேட்டான் ரவிதாஸன்.

"நடு ராத்திரியில் அவர்கள் சபை கூடிய போது வேறு யாரும் அருகில் வராதபடி பார்த்துக் கொள்ள என்னைக் காவலுக்கு அமர்த்தியிருந்தார்கள். காவல் புரிந்து கொண்டே என் காதுகளையும் கண்களையும் உபயோகப்படுத்திக் கொண்டிருந்தேன்."

"அப்படி உபயோகப்படுத்தியதில் வேறு ஏதாவது தெரிந்ததா?"

"தெரிந்தது. அந்த நள்ளிரவுக் கூட்டத்தில் நடந்ததையெல்லாம் இன்னொரு வேற்று மனிதன் கோட்டை மதில் சுவர் மேலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான்!"

"ஆஹா! அவன் யார்?"

"முன் குடுமி வைத்திருந்த ஒரு வைஷ்ணவன்"

"ஆகா! அவன்தானா? அப்படி நான் நினைத்தேன்! அவனை நீர் என்ன செய்தீர்? சம்புவரையரிடம் பிடித்துக் கொடுக்கவில்லையா?"

"அந்த நரிக்குலத்தை அடியோடு அழிப்போம்! பூண்டோடு நாசம் செய்வோம்!" என்று ஆங்காரத்துடன் கூவினான் சோமன் சாம்பவன்.

"இதோ அதற்கு வேண்டிய உபகரணங்கள்!" என்று ரவிதாஸன் பொன் நாணயங்களின் குவியலைச் சுட்டிக் காட்டினான்.

சோமன் சாம்பவன் நாணயங்கள் சிலவற்றைக் கையில் எடுத்துப் பார்த்துவிட்டு, "ஆ! ஒரு பக்கம் புலி! இன்னொரு பக்கம் பனை!" என்று சொன்னான்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்



### பரமார்த்த குரு பரியேற்றம்

அந்தக் குதிரைக் காரனோ, தான் ஒரு காலத்தில் பயன்படுத்திக் கொண்டிருந்த பழைய சேணத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். குதிரை வாலின் கீழ் மாட்டுவதற்காக இருக்கும் பின்தட்டு வாரானது அந்த சேணத்தில் காணாமலிருந்தது.

அதற்குப் பதிலாக அவர்கள் பாலைக் கொடியைத் திரித்துப் பயன்படுத்திக் கொண்டார்கள். கடிவாளமும் காணவில்லை. வைக்கோலைத் திரித்து ஒருமாதிரி கயிறாக்கி, அதனைக் கடிவாளமாகப் பயன்படுத்தினார்கள்.

'வழியிலே கண்ட குதிரைக்கு வைக்கோல் புரியே கடிவாளம்' என்ற பழமொழி அவர்களுக்காகத்தான் ஏற்பட்டது போலிருந்தது. மற்ற கருவிகளையும் எப்படி எப்படியோ சமாளித்துச் சரி செய்து கொண்டார்கள்.

ஒரு வழியாகக் குதிரையின் மேல் அமரக் கூடிய சாதனங்களும் குதிரையைக் கட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டிய கருவிகளும் சமாளித்தாகி விட்டது. பிறகு ஒரு நல்ல நேரத்தில் குதிரை மேலே குருவை ஏற்ற வேண்டும்! ஜோதிட முறைப்படி வாரசூலை இருக்கக் கூடாது. அமிர்தயோகமாக இருக்க வேண்டும். சுப முகூர்த்த நாளாக இருப்பது சிலாக்கியம். அந்த நாளை நிச்சயித்துக் கொண்டார்கள்.

அத்தகைய நல்ல நாளிலே நல்ல நேரத்திலே ஊரெல்லாம் திரண்டிருந்தது. பரமார்த்த குருவை குதிரையின் மேல் ஏற்றினார்கள். அப்போது எல்லோரும் கூச்சல் போட்டு மங்கலமாகக் குரல் கொடுத்தார்கள். சிஷ்யர்கள் ஐவரும் குதிரையைச் செலுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

மட்டி, குதிரையின் முன்புறமிருந்து கடிவாளத்தையிழுத்தான். மடையன் பின்புறமிருந்து குதிரையின் மொட்டை வாலைப் பிடித்து முறுக்கினான். மிலேச்சனும் மூடனும் குதிரையை அதட்டி ஓட்ட இரு பக்கங்களிலும் இருந்தார்கள். பேதை குதிரைக்கு முன்னே, "பரமார்த்த குரு வருகிறார்! பராக்! பராக்!" என்று எச்சரிக்கைக் குரல் எழுப்பிக் கொண்டு கம்பீரமாக நடந்து சென்றான்.

இத்தகைய அலங்கார ஆரவாரத்துடன் கிழக் குருவான பரமார்த்த குரு நொண்டிக் குதிரையின் மீது ஆனந்தமாக அமர்ந்து சவாரி மேற்கொண்டார்.

#### சுங்க வரி

நடந்தாலே வேகமாகச் சென்று விடலாம் நடக்க முடியவில்லை என்று தானே குருநாதரை குதிரையின் மேல் ஏற்றினார்கள். பாவம்... அது இருந்த நிலையில் எப்படியோ மூச்சைப் பிடித்துக் கொண்டு நடந்தது.

கொஞ்சதூரம் போனதும் சாலையின் குறுக்கே நின்று அவர்களை வழிமறித்தான் ஒருவன். திடுக்கிட்டுப் போனார்கள் குருவும் சிஷ்யர்களும்.

"நான் ஆயக்காரன். சுங்கவரி வசூலிப்பவன். நீங்கள் வரி செலுத்த வேண்டும்" என்றான் அவன்.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யமுடிந்தவன் சாதிக்கிறான்.
செய்ய முடியாதவன் போதிக்கின்றான்.
– பெர்னாட்ஷா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## 100 ஏக்கர் காணி விடுவிப்பை தாமதமின்றி விரைவுபடுத்துங்கள்

வடபகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 100 ஏக்கர் தனியார் காணிகளை விடுவிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 100 ஏக்கர் நிலத்தை விடுவிப்பதன் மூலம் அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் மிகுந்த நன்மையடைவர்.

எனினும் ஜனாதிபதி விடுத்த உத்தரவை உடனடியாக அமுல்படுத்துவதிலேயே காணி விடுவிப்பின் அனுகூலத்தை காணி உரிமையாளர்கள் அனுபவிக்க முடியும்.

பொதுவில் ஜனாதிபதி, அனுமதி வழங்கினாலும் அந்த விடயத்தை அமுல்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவதும் பின்னர் காலஅசைவில் ஏற்படக்கூடிய அரசியல் நிலை மாற்றங்களால், கைக்குக் கிட்டியது வாய்க்குக் கிட்டாமல் போவதும் வழமை.

அதாவது ஜனாதிபதி உத்தரவிட்டாலும் அதனை அமுல்படுத்துகின்ற பெரும் பொறுப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைச் சார்ந்ததாகும்.

அதிலும் இது விடயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட திணைக்களங்கள் சம்பந்தப்படும் போது, எல்லாத் திணைக்களங்களும் ஒரு நேர்கோட்டில் வருவதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

குறிப்பாக பொறுப்பற்ற அதிகாரிகள் சாட்டுப் போக்குக் கூறி, திட்டமிட்டுக் காலத்தைக் கடத்துவர்.

தவிர, படையினரும் நில விடுவிப்பு என்றதும் பின்னடிப்பர்.

இதனால் ஜனாதிபதி உத்தரவிட்டும் காரியம் நடக்காமல் போகக்கூடிய வாய்ப்பு உண்டு.

எனவே மேற்குறித்துரைத்த காலதாமதங்களுக்கு இம்மியும் இடம்கொடாமல், 100 ஏக்கர் நிலத்தை விடுவிக்க உரிய திணைக்களங்களும் அதுசார்ந்த பொறுப்பதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான் நம் தாழ்மையான கோரிக்கை.

ஏனெனில், எம் தமிழ் மக்களுக்குச் சொந்தமான ஏகப்பட்ட காணிகள் படையினரின் ஆக்கிரமிப்புக்குள் இருப்பது அனைவரும் அறிந்ததே.

இராணுவ ஆக்கிரமிப்புக்குள் எம் மக்களின் காணிகள் அகப்பட்டிருப்பதை பேரினவாதிகள் ஆதரிக்கின்றனர்.

இப்போது கூட, 100 ஏக்கர் நிலத்தை விடுவிப்பது தொடர்பில் சிங்களப் பாசிசவாதிகள் தமது எதிர்க்கருத்துக்களைத் தெரிவித்த வண்ணமுள்ளனர்.

தவிர, இலங்கையில் அரசியலும் ஆட்சி அதிகாரமும் ஸ்திரத்தன்மையற்ற நிலையிலேயே இருக்கிறது.

இந்நிலையில் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளதால் 100 ஏக்கர் நிலமும் விடுவிக்கப்படும் என்றிராமல், அந்தப் பணியை விரைவுபடுத்தி காணி உரிமையாளர்களிடம் அவற்றை ஒப்படைக்க வேண்டும்.

இதை விரைந்து செய்வதிலேயே எமது கெட்டித்தனம் தங்கியுள்ளது.

# நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் வெகு விரைவில் நமது ஆட்சி

## அநுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

தொழில் வல்லுநர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் நாட்டை விட்டு வெளியேற வேண்டாம். இலங்கையில் வெகுவிரைவில் திசைகாட்டி, ஆட்சி அமைக்கும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நமது நாட்டை ஆள்வது யார்? மதுபான தொழிற்சாலை உரிமையாளர்கள், மணற் கடத்தல்காரர்கள், மதுக்கடை உரிமையாளர்கள், கொள்ளையர்கள், குற்றவாளிகள் போன்றவர்களாவர்.

நெஞ்சில் ஈரம் இல்லாதவர்களால் இந்த நாடு ஆளப்பட்டது.

உணர்ச்சியற்ற தலைவர்கள் மக்களின் சம்பளத்தில் கைவைக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

தொழில்முறை பணியாளர்கள் 15 சதவீதம் உள்ளனர். அவர்களின் ஊதியத்திற்கு அதிக வரி விதிக்கப்படுகிறது.

வங்கிகளின் உயர்மட்ட அதிகாரிகள் 500 பேர் வரையில் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். இது தவிர, கடந்த ஆகஸ்ட் மாதத்தின்போது வைத்தியர்கள் 500 பேர் இந்த நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இவ்வாறு இவர்கள் நாட்டைவிட்டுச் செல்வதால் நாடு பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும்.

எனினும் வெகுசீக்கிரம் எமது திசைகாட்டியின் அரசாங்கம் அமையும்.

ஆகையால், எவரும் நாட்டைவிட்டு வெளியேற வேண்டாம் எனவும் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (4-7)

# கொழும்பில் சுற்றிவளைப்பு 285 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பை அண்மித்த பகுதிகளில் நேற்றுக் காலை தொடக்கம் 6 மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட விசேட போதைப் பொருள் சுற்றிவளைப்புக்களில் 285 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்ட போதைப் பொருள் கடத்தல்காரர்கள் பலர் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, குறித்த சோதனையில் ஒரு கிலோ ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் ஒரு கிலோ கஞ்சா என்பன பறிமுதல் செய்யப்பட்டதாக நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதேவேளை, தென் மாகாணம் முழுவதிலும் விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். (4-7)

## வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண். வட கிழக்கு அருள்மிகு இறைமூத்த நைனார் (கொண்டலடி விநாயகர்) ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்டப் பெருவிழா 03.02.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (நி)

# 13ஆவது திருத்தத்தை இனவாதமாக்க முயற்சி

## – லக்ஷ்மன் கிரியல்ல

(கொழும்பு)

நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு உள்ளாக்கியவர்கள் தற்போது புதிய நாடகமொன்றை அரங்கேற்றுவதற்காகவே 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டு இனவாதத்தை தூண்டுவதற்கே முயற்சிக்கப்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், 13 ஆவது திருத்தம் இன்றும் அரசியலமைப்பில் காணப்படுகிறது. 13 ஆவது திருத்தத்தின் கீழ் அனைத்து கட்சிகளும் தேர்தலில் போட்டியிடவுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன.

மாகாணசபைகளை அனைத்து தரப்பும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளன. இதனை ஏற்றுக் கொண்டமையின் காரணமாக வல்லவா தேர்தலில் போட்டியிட்டனர்? தற்போது தேர்தலுக்காக புதிய நாடகம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

நாட்டை வங்குரோத்தடையச் செய்துள்ளமையால், இனவாதத்தைத் தூண்டுவதே இலகுவான விடயமாகும். எனவே தான், அதனை செய்வதற்கு தயாராகிக் கொண்டிருக்கின்றனர் என மேலும் தெரிவித்தார். (4-7)

# மக்களைக் குழப்பினால் தண்டனை நிச்சயம்

## வடமாகாண ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை குழப்பும் வகையில் சட்டத்தை மீறும் ஒவ்வொரு நபரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

யாழ்மாவட்டத்தில் அண்மைய நாட்களில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கை தொடர்பில் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்பும் வகையில் செயற்படுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதோடு அவர்கள் அனைவரையும் உன்னிப்பாக கவனித்து வருகிறோம்.

பல சட்ட விரோத செயல்களை நாம் பார்த்திருக்கிறோம்.

இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை பொலிஸார் கைது செய்து வரும் நிலையில் வடமாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபருடனும் கலந்துரையாடி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே வடக்கு மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்புவதற்கும் சட்ட விரோத செயற்பாடுகளை ஊக்கிவிப்பதற்கும் யாருக்கும் இடம் வழங்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (4-7,104)

# சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டிகள்

(அராலி)

பொன்னாவெளி மைந்தன் சண்முகம் பாலசிங்கத்தின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு முழங்காவில் மகா வித்தியாலய பழைய மாணவர்களால் மாபெரும் சைக்கிள் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

நாளை மறுதினம் புதன் கிழமை சைக்கிள் ஓட்டப் போட்டியும் 02.02.2023 ஆம் திகதி வியாழக் கிழமை மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளன.


வெற்றி பெறுவோருக்கு பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ளதாகவும் மேலதிக விபரங்களுக்கு 077 400 4792, 077 696 6096 ஆகிய தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனைக்காக நெல்லை வீதியில் பரப்பி வியாபாரிகளுக்காக காத்திருக்கும் விவசாயிகள்

**(தருமபுரம்)**

**நெல்லுக்கான விலை மிக சடுதியாக குறைவடைந்துள்ள நிலையில் பலர் அறுவடை செய்த நெல்லினை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதன் காரண மாக வீதியில் நெல்லினை கொட்டி வியாபாரிகளுக்காக காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.**



அத்துடன் அரிசியின் விலை 230 ரூபாயை விட குறைவடையவில்லை நெல்லினை 5000 ரூபாவிலும் பார்க்க குறைந்த விலைக்கு கொள்வனவு செய்வதற்கு வியாபாரிகள் முற்படுகின்றனர்.

இது தொடர்பாக எவரும் நடவடிக்கை எடுப்பதாக எமக்கு புலப்படவில்லை.

நெல்லுக்கான விலையினை அரசாங்கம் உரிய நேரத்தில் அறிவிக்காத காரணத்தினாலே பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கவலை வெளியிட்டனர்.

இந்நிலை தொடருமாயின் விவசாயிகள் பயிர்ச்செய்கையில் இருந்து முற்று முழுதாக விலக வேண்டிய நிலை ஏற்படும் எனவும் இது தொடர்பாக விவசாய அமைச்சு அல்லது ஜனாதிபதி ஏதேனும் ஒரு தீர்வினை விவசாயிகளுக்கு பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி)

## காந்தியடிகளின் தென்னாபிரிக்கச் சத்தியாகிரகங்களும் அவை பற்றிய ஆங்கிலேயரின் மதிப்பீடுகளும்

**காந்தியடிகளின் மறைந்த தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது...**

நவீன உலகிற்கு அகிம்சை, சத்தியாக்கிரகம் என்ற சொற் களை மீண்டும் விளக்கமாகச் செயல்முறையில் நடைமுறைப்படுத்திக் காட்டியவர் மகாத்மா காந்தியே. இருபத்து நான்கு வய தான பரீஸ்ட்டர் காந்தி அவர்களை இந்தியர்களுக்கிடையே யான வழக்குத் தொடர்பாக வக்கீலாக அங்கு அழைக்கப்பட்டார். 1893 ஆம் ஆண்டுமுதல் 1914 ஆம் ஆண்டுவரை தென்னாபிரிக்காவில் தங்கியிருந்தார். அங்கு ஆங்கிலேயரின் ஆட்சியில் இந்தியர்கள் அடிப்படை உரிமைக ளைக்கூட அனுபவிக்க முடியாது வாழ்வதைக் கண்டு துன்புற்றார். அவற்றிற்கெதிராகப் போராட வேண்டும் என்ற எண்ணம் வலுவடைந்தது. ஆங்கிலேயர்கள் அங்கு வாழும் அனைத்து இந்தியர்களையும் கூலிகள் என அழைத்தனர்.

பொதுவாக ஆபிரிக்காவில்' வாழும் இந்தியர்கள் கறுப்பின மக்கள் அரசுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடத் துணிந்தவர்கள் அல்லர். கல்வி அறிவு குறைந்த வர்களாகவும் காணப்பட்டனர். நிற. சாதி. சமய, மொழி. அந்தஸ்து. ஏற்றத்தாழ்வுகள் காரணமாக இவர்களிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தினால் உரிமைகளுக்காகப் போராட தயாராகவிருக்கவில்லை.

ஆனால் காந்தியடிகள் இவர்களை ஒன்று திரட்டி ஒரே அணியாகச் செயற்படவைத்து அகிம்சை வழியில் போராட்டங்களைத் துணிந்து முன்னெடுத்தார். வெற்றியும் கண்டார். "துணிவு இல்லையேல் வாய்மை இல்லை, வாய்மை இல்லையேல் பிற அறங்களும் இல்லை" என்பது காந்தியடிகளின் கூற்றாகும். இதற்கமைவாக போராட்டங்களை முன்னெடுத்தார்.

**தென்னாபிரிக்காவில் காந்தியடிகள் மேற்கொண்ட போராட்டங்களாவன.**

1.ஆபிரிக்காவில் வாழும் இந்தியர்களை அவர்களின் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கும் உரிமைகளை பறிக்கும் மசோதாவிற்கு எதிரான போராட்டம்.

2.ஒப்பந்தக் கூலியாளர்கள் ஒப்பந்த காலம் முடிவடைந்த பின் தங்குவதற்கு 25 பவுண் வரி கட்ட வேண்டும் என்ற சட்டத்திற்கு எதிரான போராட்டம்.

3. 8 வயதிற்கு மேற்பட்ட இந் தியர்கள் தமது கைரேகைகளை பதிவுசெய்ய வேண்டும் என்ற சட்டத்திற்கு எதிரான போராட்டம்.

4. சமய முறைப்படி நடை பெறும் இந்து. இஸ்லாமியரின் விவாகங்கள் சட்டப்படி செல்லுப டியற்றவை என்றும் இவர்களின் குழந்தைகள் பெற்றோர்களிடம் இருந்து வரக்கூடிய சொத்துக்களுக்கு வாரிசுகளல்ல என்ற தீர்ப்புக்கு எதிரான போராட்டம் என்பன முக்கியமானவைகளாகும்.

**தென்னாபிரிக்கச் சத்தியாக் கிரகம் பற்றிய ஆங்கிலேயரின் மதிப்பீடு**

தென்னாபிரிக்கச் சத்தியாக்கிர கங்கள் மிகவும் அமைதியாகவும் சிறப்பாகவும் ஒரே தலைமைத்துவத்தின் கீழ் நடைபெற்றன. இவற்றை ஆங்கிலேய அரசு உன்னிப்பாக அவதானித்து வந்தது. அரசானது காந்தியடிகளின் செயற்பாடுகளைக் கண்டு ஆத்திர மடைந்தாலும் அவை அவர்களை வியக்க வைத்தன.

சத்தியாக்கிரகங்கள் வெற்றியடைந்தமைக்கான காரணங்களை ஆங்கிலேயரான சைமன் பண்டர்பிரிக் ஆராய்ந்து கருத்துக் களை வெளியிட்டார். அத்துடன் சத்தியாக்கிரகத்திற்கான ஒழுக்கமும் சிறப்பாக கடைப்பிடிக்கப்பட்டது என்பன அவரின் முக்கிய அவதானிப்புகளாகவிருந்தன. சத்தியாக்கிரகத்திற்கு வேண்டிய ஆற்றல் மிகவும் வலுவான தாகவிருந்தது. ஒழுங்கமைப்பு திறம்பட மேற்கொள்ளப்பட்டிருந்தது. செயற்பாடுகள் நன்றாக விருந்தன. இதில் ஈடுபட்டோரின் எண்ணிக்கை அதிகமானதாக விருந்தது.

தென்னாபிரிக்க இந்தியர்கள் காந்தியடிகளை தமது ஒரே ஒரு தலைவர் என்று ஏற்றிருந்தனர். சிலர் அவரது கருத்துக் களை ஏற்காவிட்டாலும் வேறு தலைவர்களை நாடவுமில்லை. அல்லது புதிய தலைவர்களைத் தெரிவு செய்யவுமில்லை.


இதனால் மக்கள் பிளவுபட வில்லை. காந்தியடி களின் செயற்பாடுகள் அரசை அடிபணிய வைக்கும் நோக்கமாக இருக்கவில்லை.

மக்களின் குறைகளை அரசிற்கு தெளிவாக எடுத்துரைத்து மக்களைத் தாமும் ஒரு ஒழுங்கான மனிதர் என்ற எண்ணத்துட னும் உரிமைகளுடனும் வாழ வைப்பதாகவே இருந்தது. அகிம்சை, வாய்மை, ஒற்று மையின் பலம் எவ்வளவு வலி மையானது என்பதை எல்லோரு க்கும் விளங்கவும் உணரவும் வைத்துள்ளன.

**செ.சர்வகா**
**ஆசிரியர்**

## உலக விடுதலைப் போராளியின் 75 ஆவது நினைவு தினம்

1948 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி கோட்சே என்கின்ற இந்துத்துவ துப்பாக்கிதாரியின் குண்டுக்கு இலக்காகி அகிம்சா மூர்த்தி அண்ணல் காந்தி மண்ணிலே சரிந்தார்.



ஆம் இன்று நாம் அவரின் 75 ஆவது இறந்த தின நினைவு நாளை நினைவு கூர்ந்து கொண்டிருக்கிறோம். அவர் எமக்கு எவற்றை விட்டுச் சென்றார். தனது வாழ்க்கை முறையை செய்தியாக்கிச் சென்றார்.

இன்று காந்தீயம் பேசப்படுகின்றதென்றால் உலக விடுதலைப் போராளிகளில் உச்சத்தில் வைத்துப் போற்றப்படும் காந்திஜியின் கருத்துக்கள் எக்காலத்திற்கும் அனைத்து மனிதர்களுக்கும் பொருந்தக்கூடியனவாக இருக்கின்றன என்பதாலாகும்.

காந்தியின் இந்திய சுதந்திர விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் ஈழத்திலும் எதிரொலித்தது. இங்கும் காந்தியவாதிகள் பலர் அக்காலகட்டத்தில் உருவானார்கள். காந்தியின் புகைப்படங்களை வீட்டுச் சுவர்களில் மாட்டி அவரை கடவுளாக மக்கள் வழிபட்டார்கள். அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் முதலாவது தலைவர் திரு.வறன்டி பேரின்பநாயகம் தலைமையிலான காந்திய அன்பர்கள் 1927 ஆம் ஆண்டு காந்தியை இலங்கைக்கு அழைத்து வந்து கதர் இயக்கத்திற்கு பலம் சேர்த்தார்கள்.

சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் காந்தியின் பெயரில் சமூக நிறுவனங்களை உருவாக்கி அவரை நினைவுகூரத் தொடங்கினார்கள். காந்திசேவா சங்கம் காந்தியக் கொள்கைகளை முன்னிறுத்தி மாவட்டங்கள் தோறும் செயற்படத் தொடங்கியது. 1969 ஆம் ஆண்டு காந்தி நூற்றாண்டு விழாவும் 2019 ஆம் ஆண்டு 150 ஆவது ஜயந்தி தினமும் விமர்சையாக கொண்டாடப்பட்டன.

ஒவ்வோர் ஆண்டும் இந்தியத்தூதரகம் காந்தி ஜெயந்தியையும் (ஒக்டோபர் 2), சிரார்த்த தினத்தையும் (ஜனவரி 30) கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் அனுஷ்டித்து வருகின்றது.

இலங்கை இந்திய கலைஞர்களைக் கொண்டு நிகழ்வுகளை ஏற்பாடு செய்து இரு நாடுகளுக்குமிடையே கலாசார உறவுப்பாலத்தை ஏற்படுத்தி வருகின்றது.

காந்திசேவா சங்கத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டக் கிளைகள் அந்தந்த மாவட்டங்களில் காந்தி நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றன. மலையகத்தில் மகாத்மா காந்தி சபாவின் ஏற்பாட்டில் காந்தியை நினைவுகூர்ந்து கட்டுரைப் போட்டிகளும் இதர நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு குறிப்பாக தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் காந்தி நினைவு கூரப்படுவதென்பது சம உரிமை கேட்டு நிற்கும் இனத்திற்கு ஒரு பெரும் பலமாகும்.

ஆயுதப் போராட்டத்தாலோ, வன்முறையாலோ பெற்றுக்கொள்ள முடியாத விடுதலையை அகிம்சை ரீதியான போராட்டத்தின் மூலம் பெறலாம் என்று நம்புவது இன விடுதலை வேண்டி நிற்கும் போராட்டங்களுக்கு வலுச் சேர்ப்பதாகும்.

அகிம்சைவாதியான காந்தி வன்முறை மூலம் சுட்டுக்கொல்லப்பட்டதை உலகில் பெரும்பான்மையான மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எதிரியையும் மன்னிக்கும் மனப்பான்மையை கற்றுத்தந்தவர் காந்தியடிகள்.

அண்ணலின் தியாகம் என்றும் மறக்கப்படாது. இந்த உலகு உள்ள வரை காந்தியமே மனிதன் திருந்துவதற்கான ஒரே மார்க்கமாக விளங்கப் போகின்றது என்பது உறுதி.

**எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி**
**ஆசிரியர், காந்தீயம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்ளைக்...

கோவிலுக்கு அண்மையாக கடந்த ஜனவரி 3ஆம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

5 பேர் கொண்ட கும்பல் வாள்களுடன் வீட்டுக்குள் புகுந்து அங்குள்ளவர்களை இருத்திவைத்து மூன்று பெண்களை அடித்துத் துன்புறுத்தியும் வயோதிபர்களை அச்சுறுத்தி விட்டு 12 தங்கப் பவுண் நகைகளைக் கொள்ளையிட்டுத் தப்பித்தது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணைகளில் சுன்னாகம், இணுவில் பகுதிகளைச் சேர்ந்த 25, 26 வயதுகளையுடைய நால்வர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் கொள்ளையிட்ட நகைகளில் ஒரு பகுதி, அடகு வைக்கப்பட்ட நிலையில் பற்றுச்சீட்டுகள் மற்றும் வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, கடந்த ஜனவரி 15 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று வீதியில் சென்ற ஆசிரியையை தாக்கிவிட்டு நகையைக் கொள்ளையிட்ட சம்பவத்துடனும் இந்த சந்தேக நபர்களுக்கு தொடர்புள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (4-7,104)

## 3 தமிழ் அரசியல்...

குற்றத்திற்காகத் தண்டனை பெற்று வரும் விடுவிக்கப்பட மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலாளியை விடுவிக்க விரும்புவதாக பொன்சேகா பாராளுமன்றத்தில் அறிவித்த போதிலும், அவரது கையொப்பமிடப்பட்ட ஒப்புதல் பெறப்படவில்லை.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் இன்னும் அவரிடம் கலந்தாலோசிக்கவில்லை என பொன்சேகாவின் ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். (4-7)

## மோ.சைக்கிள்...

சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொரு இளைஞன் படுகாயமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் 38 வயதுடைய கொடிகாமத்தில் உள்ள நகைக்கடை ஒன்றின் உரிமையாளர் எனத் தெரியவந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,30)

## 13ஐ அமுல்படுத்...

முறைப்படுத்தவில்லை.

இதனால், அதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் தற்போதும் சமூகத்திற்குள் இருக்கின்றதா? என்பதை ஆழமாக ஆராய்ந்த பின்னர் அதனை முற்றாக நடைமுறைப் படுத்துவது குறித்து தீர்மானிக்க வேண்டும் என தான் கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

13வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை ஆழமாக ஆராயாது அதனை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கான இணக்கத்தை தான் சர்வகட்சி மாநாட்டில் வழங்கவில்லை எனவும் சாகர காரியவசம் கூறியுள்ளார். (4-7)

## கட்டணம் அதிகரி...

எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனவரி 1 முதல் தொடர் மின்சாரம் வழங்குவதற்கான திட்டங்களை சமர்ப்பித்தோம். பொதுப் பயன்பாட்டு ஆணையம் அனுமதி தரவில்லை.

தற்போதுகூட அனுமதி கிடைத்தால், நாளை முதல் தொடர்ந்து மின்சாரம் வழங்கும் திட்டத்தை செயற்படுத்தலாம் எனத் தெரிவித்தார். (4-7)

## பகுப்பாய்வு...

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அந்தக் காணிகளை விடுவிப்பது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர், பாதுகாப்புப் படைகளின் பிரதானி மற்றும் முப்படைத் தளபதிகளுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களுக்கு அமைய செயற்படுவோம்.

ஆய்வு செயல்முறை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஒப்புதலைத் தொடர்ந்து ஜனாதிபதியின் அலுவலகத்திற்கு அதன் பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்தார். (4-7)

## 20 வருடமாக...

தெரிவித்தபோதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது அதற்கு போட்டியாக அரசுக்கு ஆதரவாக இன்னொரு கட்சி உருவாக்கப்பட்டது. அது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பதிவும் செய்யப்பட்டது.

அரச கூலியாக இருந்தவர்கள் தான் அந்த கட்சியை பதிவு செய்தவர்கள். தங்களிடத்தில் எது இல்லையோ அதை தங்களுடைய பெயரிலேயே சேர்த்துக் கொண்டார்கள். ஜனநாயகமாக அவர்கள் செயற்படவில்லை, அந்த நேரத்திலே வீதி வீதியாக சந்தி சந்தியாக நின்று காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தவர்கள். அரச கூலிப்படையாக செயற்பட்டவர்கள் பதிவு செய்த அரசியல் கட்சிக்கு பேர் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி.

அவ்வாறானவர்கள் இன்றைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தாங்கள் பாதுகாக்கின்றோம் என்று நீலிக்கண்ணீர் வடிக்கின்றார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு போட்டியாக அரச கைக்கூலியாக கட்சியை வைத்திருக்கின்ற அவர்கள், இன்றைக்கு அந்தக் கட்சியிலே போட்டியிட்டுக் கொண்டு அதற்குப் பெயர் கூட்டமைப்பு என்று சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## இன்று...

எது.

அதன்படி, நாளை மற்றும் பெப்ரவரி முதலாம் திகதி நாடளாவிய ரீதியில் பல இடங்களில் சுமார் 150 மில்லிமீற்றர் வரையான கடும் மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் என அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு கடற்பிராந்தியத்திற்கு மேலாக தாழமுக்கம் நிலைகொண்டுள்ளதுடன், நாளை மேலும் தீவிர மடைந்து வங்காள விரிகுடாவின் தென்மேற்கு பகுதியில் நிலைகொள்ளும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. (4-7)

## ஒரு பகுதி...

நாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொங்கல் நிகழ்வுக்காக வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலி வடக்கில் உள்ள தனியார் காணிகளை பகுதி பகுதியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

அதன்பின் யாழ். மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் மற்றும் மாவட்ட உயர் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் தொடர்பில் ஜனாதிபதி செயலக அதிகாரிகள் கள விஜயத்திலும் ஈடுபட்டனர்.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் சுதந்திர தினத்துக்கு முன்னர் வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஒரு பகுதிக் காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 29/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1470
வெற்றி இலக்கங்கள்
கன்னி 2 7 3 7 3 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.01.29
சீட்டிழுப்பு இலக்கம் - 1045
Q 01 37 72 80
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 3257
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
X 22 36 38 42
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 29/01/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1363
D 05 19 37 63 65

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.01.29
சீட்டிழுப்பு இலக்கம் 324
சிம்மம் 15 16 24 57 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/01/29
சீட்டிழுப்பு இலக்கம் 5015
B 4 9 1 1 3 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1990
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.01.29
தினம் ஞாயிற்றுக்கிழமை
H 09 17 44 74
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,932,200/-
DLB

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.29
சீட்டிழுப்பு இல : 4151
வர்ணம் : இளஞ்சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,404,300/-
வெற்றி இலக்கங்கள் 15 17 24 28 S
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 281
சீட்டிழுப்பு திகதி 2023.01.29
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 06 18 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,420,560/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,604,356/-
திகதி 2023-01-29
வெற்றி வாரம் 3702
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 04 13 19 51
மகரம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 8,199,240/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 03 30 31 50 63
சீட்டிழுப்பு வாரம் 1166
வர்ணம் மஞ்சள்
2023.01.29
ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 301,827,032.20
DLB
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1816
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.01.29
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,708,140/-
வெற்றி இலக்கங்கள் 01 13 45 74 Y
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றை படம்பிடித்த இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

சந்தேகத்திற்கு இடமான முறையில், பாராளுமன்ற வளாகத்தை கையடக்கத் தொலைபேசி மூலம் படமெடுத்த இருவரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் இருவரும் பாராளுமன்ற மைதானத்தில் இருந்து பாராளுமன்றத்திற்குள் நுழையும் பாதை வழியாக உள்ள தியவன்னா ஓயாவுக்கு அருகில் நின்று பாராளுமன்ற வளாகத்தை படமெடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் பாராளுமன்றத்தை படமெடுத்தமைக்கான நோக்கத்தை சந்தேகநபர்கள் இதுவரையில் வெளியிடாத நிலையில் தலங்கம பொலிஸார் அவர்களிடமிருந்து வாக்கு மூலம் பெற்று வருகின்றனர். (4-7)

# மாதகலில் இருவர் கசிப்புடன் கைது

(அராலி)

இளவாலைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதகல் சம்புநாத பெருமான் ஆலயத்திற்கு அருகாமையில் இருந்து கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

இளவாலைப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்புநாதர் ஆலயத்திற்கு அருகாமையில் இருந்து 10 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7)


அகரம்
உயர்நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்
புதிய கல்வி ஆண்டு -2023
புலமைப்பிரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான
புதிய தரம் 06 தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்
05.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)
தைப்பூச நன்னாள் அன்று காலை 7.40 - 8.40
அனுமதிகளை 18.01.2023 இருந்து பெற்றுக் கொள்ளலாம்
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
(14411)



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14446)
076 825 7716 (ஆகாஸ்)



பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்
நேரடி & ZOOM
A/L 2023, A/L 2024
கணக்கீடு
(தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்)
MR. BALAKAJEN
சாதித்தவர்களை கேளுங்கள்...
சாதனைக்கான வழியை...
KBK ACCOUNTING COLLEGE
• பலாலி வீதி, கந்தர்மடம். 077 216 8884
• கஸ்தூரியார் வீதி, கொழும்புத்துறை. Whatsapp - 077 452 0043
(14406)



றோயல் அக்கடமி
ROYAL ACADEMY
நாவலர் றோட், நல்லூர் | அரசடி றோட், யாழ்நகர்
புதிய கல்வியாண்டு - 2023
தரம் 6 தமிழ்மொழி மூலம் English Medium
ஆரம்பம் 01.02.2023 புதன்கிழமை
* கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T, சிங்களம் ஆகிய பாடங்கள் நடைபெறும்.
யாழ் றோயல் காலை 7 மணி
நல்லூர் றோயல் காலை 9 மணி
தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.
குறிப்பு: பெற்றோர் - ஆசிரியர் கலந்துரையாடலைத் தொடர்ந்து "நாள் வகுப்புக்கள்" ஆரம்பிக்கப்படும். – இயக்குநர்
(14423)



வீடு வாடகைக்குண்டு
நாவற்குழி A9 வீதியில் சோழாஸ் சிற்பகலையகத்திற்கு பின்னால் உள்ள இரண்டு அறை, கோல் குசினி, பாத்றூம், 2 டொயிலற் உடன் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு (14431)
077 771 1071



ஆசிரியர் தேவை
தெல்லிப்பளையில் இயங்கும் கல்வி நிலையம் ஒன்றுக்காக
(தரம் 6 - 11 வரை)
• கணிதம்
• விஞ்ஞானம் 077 834 3666
Zoom Class
10-11 இந்துரிய வரலாறு - S.B.Sanu
077 834 3666
(14426)



பவளவிழா வாழ்த்து
பேராசிரியர்
மா.சின்னத்தம்பி



அகவை எழுபத்தைந்தை அணி கொள்ளும் எமது மண்ணின் கல்விக் கலங்கரை விளக்கு பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள் என்றென்றும் நலமோடும் வளமோடும் வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றோம்.
Board of Directors (JATE)
Jaffna Academy for Tertiary Education Thirunelvely.
(14448)



காணி விற்பனைக்கு
பத்து பரப்பு காணி இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
லேலண்ட் கொம்பனி நாவற்குழி அருகாமை வீதியில் A9 றோட்டில் இருந்து 300 மீற்றர் தூரம் நல்ல தண்ணீர், நல்ல சூழல், நிலப்பரப்பு
077 638 5683
076 755 8606
(14449)



Micom
Yoganantham At mahajana College



Yoganantham with Proffesor At the University



Law of contract,Company Law, Commercial Law,Cambridge english
(Mahajana College Last time 2 students got A)
IELTS கற்பிக்கப்படும் Lecturer details
international College of Law, Business& Computer Studies LLB (Col Uni), Dip in Journalisam, Lecturer in Laws, ICFAI University (Hyderabad) University of Ballarat (Australia)



Mohanarajah Yoganantham
(M.Raja Yoganantham)
Proprietor
who issued morethan 20,000 certificates in all Subjects Sofar
Colombo Branch,
Veeramanikathevanthurai,
Myliddy K.K.S,Jaffna.
Vaverset place,moor Road. (14429)
Hotline: 077 395 0215


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.